**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண். 102 /2016**

நாள்: 29.08.2025.

பெயர்: இளவரசி (வா.சா.1) க/பெ அன்புமணி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை...**

1. தாவா 1, 2 இன சொத்துக்கள் என் தாய் அமுதா என்பவருக்கு பாத்தியம் என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா 1ம் இன சொத்து 52 ஏர்ஸ் என்றால் சரிதான். தாவா 1ம் இன சொத்துக்கு பட்டா 1ம் பிரதிவாதி கொளஞ்சிநாதன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். 17.01.2002 தான செட்டில்மெண்ட் தேதியிலிருந்து எனது தாய் அமுதா பெயரில் பட்டா மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் எடுக்கப்பட்டது, ஆனால் அதற்குள்ளாகவே எனது தாய் வாகன விபத்தில் இறந்துவிட்டார். மேற்படி வாகன விபத்து எந்த தேதியில் நடைப்பெற்றது என்றால் 02.05.2014 ல் நடைப்பெற்றது. எனது தாய் பெயரில் பட்டா மாற்றம் செய்ய நடவடிக்கை எடுத்ததாக சொல்லப்படுவதற்கு ஆதரவு ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தாய் பெயருக்கு பட்டா மாற்றம் செய்ய எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, வழக்கிற்காக நடவடிக்கை எடுத்ததாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா 1ம் இன சொத்தில் என்ன பயிர் செய்து வரப்படுகிறது என்றால் முந்திரி மரம், ஆரஸ்பதி மரம்.

2. எனது தாய் உயிருடன் இருந்த காலத்தில் 1ம் இன சொத்திற்கு வாய்தா கட்டி உள்ளாரா என்றால் கட்டி உள்ளார். மேற்படி வாய்தாக்களுக்கான ரசீதினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தாய்க்கு செட்டில்மெண்ட் எழுதிய தேதி முதல் 1ம் பிரதிவாதிதான் 1ம் இன சொத்தில் முந்திரி மகசூல் செய்துவருகிறார் என்றால் சரியல்ல, நாங்கள் தான் மகசூல் செய்து வருகிறோம். தாவா 1ம் இன சொத்து 1ம் பிரதிவாதியின் பூர்வீக சொத்து என்றால் சரியல்ல. எனது தாய் வழி தாத்தாவான இராமானுஜம் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த சொத்தாகும், மேற்படி எழுதிக்கொடுத்த ஆவணத்தை

நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 17.01.2002ம் தேதிய தான செட்டில்மெண்டிலிருந்து அந்த சொத்தை 1ம் பிரதிவாதிதான் அனுபவம் செய்துவந்து அவர் பெயரிலேயே பட்டா இருந்து வருகிறது என்றால் சரியல்ல, தான செட்டில் மெண்ட் எழுதிய தேதிலிருந்து சேலத்திற்கு வேலைக்கு சென்று அங்கே தங்கிவிட்டார். தாவா 1ம் இன சொத்தை 1ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருவதால்தான் அவர் பெயரிலேயே பட்டா இருந்து வருகிறது என்றும், அமுதா தாவா 1ம் இன சொத்தை அனுபவம் செய்யாததால் தான் பட்டா அவர் பெயரில் மாறவில்லை என்றாலும் சரியல்ல. 17.01.2002 தேதிய தான செட்டில்மெண்ட் படி தாவா 1ம் இன சொத்தினை சுவாதீனம் எனது தாய் அமுதாவிற்கு கொடுக்கப்படாத காரணத்தினால் மேற்படி தானசெட்டில்மெண்ட் அமுலுக்கு வரவில்லை என்றால் சரியல்ல.

3. தாவா 3ம் இன சொத்தை 25 வருடங்களுக்கு முன்னர் 1ம் பிரதிவாதியின் தந்தை கந்தசாமி உயிருடன் இருந்த காலத்திலேயே வாய் மொழி பாகமாக 1ம் பிரதிவாதிக்கு தாவா 3ம் இன சொத்தை ஒதுக்கிக் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. தாவா 2ம் இன சொத்து மட்டும் தான் எனது தாய் அமுதாவிற்கு பாத்தியப்பட்டது, தாவா 1,3 இனசொத்துக்களில் எனது தாய் அமுதாவிற்கு எவ்வித உரிமையோ பாத்தியமோ இல்லை என்றால் சரியல்ல. தாவா 2ம் இன சொத்து பொறுத்து மட்டும்தான் எனக்கு பாக பரிகாரம் கிடைக்கதக்கது என்றாலும் தாவா 1,3 இன சொத்துக்களை பொறுத்து இவ்வழக்கு தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றாலும் சரியல்ல.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.